DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 113/2022 |
| Police Station | Manamadurai P.S |
| Deposition of Witness for | LW.1/PW.1 |
| Name | அழகுசுந்தரம் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1 absent. petition filed and allowed. A2, A3, A4 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.02.2024 at **12.01**a.m

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிப்காட் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2018ம் ஆண்டு சிப்காட் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது 01.05.2018 மாலை 6 மணிக்கு மானாமதுரை சித்திரை திருவிழா வைகை ஆறு நிலச்சோறு விழாவிற்கு பாதுகாப்பு அலுவலாக நானும், சிப்காட் முதல் நிலை காவலர் 743 திரு. கண்ணன், பழையனூர் முதல்நிலை காவலர் 585 லட்சுமணன், ஆகிய மூன்று பேரும் மானாமதுரை பழைய பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தோம். 02.05.2018மம் நள்ளிரவு 1 மணியில் 3 பேரும்பணியில் இருந்த போது டி.எண். 63 ஏ.ஜே 3803 ஸ்பெலண்டர் இருசக்கர வாகனம் மற்றும் டி.எண். 63 பி.ஏ 7069 என்ற பதிவெண் உடைய யமெகா இருசக்கர வாகனம் ஆகியவற்றில் வந்த 4 பேர்களும், பெயர் விலாசம் கேட்டு தெரிந்த கீழமேல்குடி கிராமத்தை சேர்ந்த சேது மகன் பாரதி, மானாமதுரையை சேர்ந்த கார்த்திக் மகன் செந்தில்முருகன், கீழமேல்குடி கிராமத்தை சேர்ந்த சந்திரன் மகன் பிரசாத், செந்தமிழ்நகர் சேர்ந்த சிங்கதுரை மகன் மோகன் ஆகிய 4 பேரில் பாரதி மற்றும் செந்தில்முருகன் ஆகிய இருவரும் ஏன்டா போலீஸ்கார தேவிடியா மகன்களா நாங்க மிலிட்டரிடா ஆத்துக்குள்ள நாங்கள் ஜாலியாக தான் இருப்போம்

எங்களை அடித்துவிரட்டுவீர்களா என்றும், உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்றும், 1ம் எதிரி பாரதி மறைத்து வைத்திருந்த ரீப்பர்கட்டையால் எனது பின்பக்க தலையில் அடித்து, ரத்தக்காயம் ஏற்படுத்தினார். உடன் இருந்த காவலர்கள் பிடிக்க முற்பட்ட போது எதிரிகள் 4 பேரும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்றும், போலீசார் யார் வந்தாலும் அடிக்காமல் விடமாட்மோம் என்றுசொல்லி எச்சரித்து கொலை மிரட்டல் விடுத்தனர். அதன்பின்பு பணியில் இருந்த காவலர் என்னை மானாமதுரை அரசு மருத்துவமனியல் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு நான் 7 நாடகள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மானாமதுரை சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் அவரிடம் புகார் மனுக் கொடுத்தேன். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு அடிப்படையில் முதல்தகவல்அறிக்கை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 113/2022 |
| Police Station | Manamadurai P.S |
| Deposition of Witness for | LW.2/PW.2 |
| Name | கண்ணன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1 absent. petition filed and allowed. A2, A3, A4 present.**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.02.2024 at **12.15**a.m
**முதல் விசாரணை:**

நான் தற்போது சிப்காட் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 01.05.2018ம் தேதி சிப்காட் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது 01.05.2018 மாலை 6 மணிக்கு மானாமதுரை காவல் நிலைய பழைய பேருந்து நிலையத்தில் மானாமதுரை சித்திரை திருவிழா வைகை ஆறு நிலச்சோறு விழாவிற்கு பாதுகாப்பு அலுவலாக நானும், சிப்காட் முதல் நிலை காவலர் 1067 திரு. அழகுசுந்தரம், பழையனூர் முதல்நிலை காவலர் 585 லட்சுமணன், ஆகிய மூன்று பேரும் மானாமதுரை பழைய பேருந்து நிலையத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தோம். 02.05.2018ம் நள்ளிரவு 1 மணியில் 3 பேரும்பணியில் இருந்த போது டி.எண். 63 ஏ.ஜே 3803 ஸ்பெலண்டர் இருசக்கர வாகனம் மற்றும் டி.எண். 63 பி.ஏ 7069 என்ற பதிவெண் உடைய யமெகா இருசக்கர வாகனம் ஆகியவற்றில் வந்த 4 பேர்களும், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த கீழமேல்குடி கிராமத்தை சேர்ந்த சேது மகன் பாரதி, மானாமதுரையை சேர்ந்த கார்த்திக் மகன் செந்தில்முருகன், கீழமேல்குடி கிராமத்தை சேர்ந்த சந்திரன் மகன் பிரசாத், செந்தமிழ்நகர் சேர்ந்த சிங்கதுரை மகன் மோகன் ஆகிய 4 பேரும் எங்கள் அருகில்வாகனத்தை நிறுத்திவிட்டு, மேற்படி முதன்மை காவலர் அழகுசுந்தரத்திடம்

பாரதி மற்றும் செந்தில்முருகன் ஆகிய இருவரும் ஏன்டா போலீஸ்கார தேவிடியா மகன்களா நாங்க மிலிட்டரிடா ஆத்துக்குள்ள நாங்கள் ஜாலியாக தான் இருப்போம் எங்களை அடித்துவிரட்டுவீர்களா என்றும், உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்றும், 1ம் எதிரி பாரதி மறைத்து வைத்திருந்த ரீப்பர்கட்டையால் அழகுசுந்தரம் பின்பக்க தலையில் அடித்து, கொல்லாமல் விடமாட்டோம், இதோடு செத்து தொலைடா என்று சொல்லி அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார்கள். உடன் இருந்த காவலராகிய நானும், லட்சுமணனும் மற்றும் பொதுமக்கள் பிடிக்க முற்பட்ட போது எதிரிகள் 4 பேரும் தங்களது இருசக்கர வானத்தில் ஏறி போலீசார் நாய்களா உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்றும், போலீசார் யார் வந்தாலும் அடிக்காமல் விடமாட்மோம் என்று சொல்லி எச்சரித்து கொலை மிரட்டல் விடுத்து பைக்கில் சென்றுவிட்டனர். அதன்பின்பு பணியில் இருந்த நானும், லட்சுமணனும் காயம்பட்ட அழகுசுந்தரத்தை மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்னர் அழகுசுந்தரம் மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அங்கு அழகுசுந்தரம் 7 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். வழக்கு சம்பந்தமாக அழகுசுந்தரம் மானாமதுரை காவல் சார்பு ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்தார். புகார் மனு அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**